# தூய்மைக்கேடுகள்

தூய்மைக்கேடுகள் என்பது சுற்றுச்சூழல் மற்றும் அதன் மூலம் மானுட வாழ்க்கையின் மீதான பாதிப்புகளை குறிக்கின்றது. இவை பெரும்பாலும் மனிதர்களின் செயல்பாடுகளால் ஏற்படுகின்றன. தூய்மைக்கேடுகள் காற்று, நீர் மற்றும் ஒலியின் மூலம் மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றின் விளைவுகள் மிகவும் தீவிரமானவை.

காற்று தூய்மைக்கேடு ஏற்படக் காரணம் குப்பைகள் எரிக்கப்படுவது, வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வெளியிடும் புகைகள் ஆகும். இந்தப் புகை காற்றில் கலப்பதால், காற்று மண்டலம் அசுத்தமாகிறது. இதனால், சுவாசிக்க தூய்மையான காற்று இல்லாமல் உயிரினங்கள் தவிக்கின்றன.

மேலும், கழிவுப் பொருள்கள் ஆற்றில், குளத்தில், கடலில் கலக்கப்படுவதால், நீரும் அசுத்தமாகிறது. இதுவே நீர் தூய்மைக்கேடு ஆகும். தூய்மைக்கேடு அடையும் நீரை உயிரினங்கள் பயன்படுத்தும் போது பலவித நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

நகரங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மிகுந்த ஒலியை உருவாக்குகின்றன. இத்தகைய ஒலி மனிதர்களின் கேட்கும் ஆற்றலைப் பெரிதும் பாதிக்கின்றது. தொடர்ந்து எதிரொலிக்கும் பெரிய சத்தங்கள், குறிப்பாக வாகன ஒலிகள், மனிதர்களின் மனநலத்தையும் பாதிக்கின்றன. இதனால் மனஅழுத்தம், தூக்கமின்மை, உயர் ரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

புவியை நேசிக்கும் பண்பு அனைத்து மனிதர்களிடமும் இருக்க வேண்டும். அப்போது தான் தூய்மைக்கேட்டைத் தவிர்க்க முடியும். உலகம் தூய்மையாக இருந்தால் மட்டுமே உயிரினங்கள் சிறப்பாக வாழ இயலும்.

LIVEWORKSHEETS